**செய்தி வெளியீடு எண்:119** **நாள் : 20.03.2015**

**செய்தி வெளியீடு**

1. **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, நடைபெறும் நல்லரசில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் **திரு. ந. சுப்ரமணியன்** அவர்கள் தலைமையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுடன் ஆதிதிராவிடர் நலத்துறை, இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5ல் உள்ள கூட்ட அரங்கில் ( Conference Hall) ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது.

2. ஆய்வுக்கூட்டத்தின்போது, ஆதிதிராவிடர் நலத்துறையில் பணிபுரிந்தபோது, இறந்த பணியாளர்களின், வாரிசுதாரர்களுக்கு பதிவு மூப்பின்படியும், கல்வி தகுதியின் அடிப்படையிலும், 12 நபர்களுக்கு கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக பணி அமர்த்திட, பணி ஆணை வழங்கப்பட்டது. 2014–15ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1992.45 கோடியில், இதுவரை, ரூ.1422.71 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 71.40 சதவிகிதம் ஆகும். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதியையும், 31.03.2015–ற்குள் செலவு செய்திட, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை முழுமையாக செயல்படுத்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் பயன்பெற முழுமையான ஒத்துழைப்பு அளிக்கும்படி, இவ்வாய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

4. இவ்வாய்வு கூட்டத்திற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, முதன்மைச் செயலர், முனைவர் கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், திரு எஸ். சிவசண்முகராஜா, இ.ஆ.ப., மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**